# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108516

1. District : மாவட்டம் Tiruppur | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 8/2020/AC/TPR | Date: நாள் 20.11.2020

2. (i) Act சட்டம்: Cr.Pc — Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: P.C (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 19/11/2020 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 19.00hrs | Time to : நேரம் வரை 22.30hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.11.2020 | Time : நேரம் 11.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Vol III | Time : நேரம் 11.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக டைப் செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5km தென்கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருப்பூர்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. [illegible] | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சாமிநாதன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20/5/66 | (d) Nationality : நாட்டினம் இந்திய | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் [illegible] மாவட்ட [illegible] ஆய்வுக்குழு அலுவலர் | (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. ரவிச்சக்கரவர்த்தி, கணினி உதவியாளர், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் 2. திருமதி. V. கோகிலா, கணினி உதவியாளர் திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் 3. திரு. P. சந்திரசேகர், பணி தள பொறுப்பாளர், தொரவலூர் ஊராட்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இந்த மனு தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20.11.2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.11.2020 / 12.45hm

Name: பெயர் ...R. [illegible]
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
[illegible]

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 8/2020/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 19.11.2020-ம் தேதி காலை 11.00 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.எஸ்.இரத்தினம் அவர்கள் அலுவலகம் ஆஜராகி ஒரு டைப் செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அதன் விபரம் வருமாறு. அனுப்புனர் திரு.S.இரத்தினம், கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர். காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.எண்.619/2020/ஜ1 நாள்.20.11.2020 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – ஊராட்சி ஒன்றிய அலுவ்லகம், திருப்பூர் - புகார் மனு வழங்குதல் - தொடர்பாக நேற்று 19.11.2020-ம் தேதி மாலை திருப்பூர் மாவட்டம் திருப்பூர் கோர்ட் வீதியில் உள்ள திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் ஒப்பந்ததாரர்களிடமும் பொதுமக்களிடமும் கையூட்டாக பணம் கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் நானும் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோர்கள் சகிதம் மேற்படி அலுவலகத்தை 19.11.2020-ம் தேதி மாலை சுமார் 19.00 மணி முதல் சுமார் 22.30 மணிவரை திடீர் தணிக்கை செய்தோம். இந்த திடீர் தணிக்கையின்போது தொரவலூர் ஊராட்சி பணி தள பொறுப்பாளரான திரு.P.சுந்தரமூர்த்தி, கம்ப்யூட்டர் ஆபரேட்டர் திருமதி.V.கோகிலா, கணினி உதவியாளர் திரு.நவீன்சக்கரவர்த்தி ஆகியோர்களிடமிருந்து கணக்கில் வரரத . மொத்தபணம் ரூ.21,710/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) திரு.R.பழனிசாமி அவர்களிடமிருந்து வட்டார ஊராட்சி வருகைப் பதிவேடு 2020, வட்டார ஊராட்சி வருகைப் பதிவேடு நடப்பு குறிப்பு-2020, களப்பணியாளர் முகாம் பதிவேடு, வட்டார ஊராட்சி அலுவலகப் பணியாளர் முகாம் பதிவேடு-2020 வட்டார ஊராட்சி, வருகை தராதவர்கள் பதிவேடு-2020, வட்டார ஊராட்சி, மாற்றுப்பணி வருகை

கிழக்கு பார்த்த திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குள் மாலை சுமார் 19.00 மணிக்கு நுழைந்த போது கிழக்கு பார்த்திருந்த அறையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவரது இருக்கையில் அமர்ந்திருந்த திரு.S.மணிகண்டன் என்பவரிடம் அறிமுகம் செய்து கொண்டு விசாரிக்க இவ்வலுவலகத்தில் கடந்த ஜூலை-2020 முதல் பணிபுரிந்து வருவதாக கூறினார். அவரை விசாரிக்க அவர் தானாகவே தனது வலது புற பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.940/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.S.மணிகண்டன் அவர்கள் இருக்கைக்கு எதிரே அமர்ந்திருந்த மூன்று நபர்களில் திருமதி. R.கோகிலா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (MGNREGS) என்பவரை விசாரிக்க அவர் தானாகவே முன் வந்து தனது பர்சில் இருந்து பணம் ரூ.540/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க இது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நபர் அருகே அமர்ந்திருந்த திருமதி.S.சாந்தி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) என்பவரை விசாரிக்க அவர் தானாகவே முன் வந்து தனது பர்சில் இருந்து பணம் ரூ.170/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க இது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நபருக்கு அடுத்தபடியாக அமர்ந்திருந்த திரு.R.பழனிசாமி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) என்பவரை விசாரிக்க அவர் தானாகவே முன் வந்து தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.1230/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க இது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறைக்கு தெற்குபுறத்தில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவரது அறைக்குள் நுழைந்த போது திருமதி.D.சாந்திலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்கள் தனது இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரிடம் அறிமுகம் செய்து கொண்டு மேற்படி நபரை விசாரிக்க அவர் தான் கடந்த 01.07.2020 முதல் இவ்வலுவலகத்தில் பணிபுரிந்துவருவதாகவும் அவர் தானாகவே தனது இருக்கைக்கு அருகே வைத்திருந்த கைபையில் இருந்து பணம் ரூ.20/-ஐ எடுத்து ஆஜர் செய்தார்.மேற்படி பணம் குறித்து விசாரிக்க இது தனது சொந்த பணம் என்று கூறியதால்

அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்கள் இருக்கைக்கு எதிரே அமர்ந்திருந்த திரு.S.சண்முகவேல் என்பவரை விசாரிக்க தான் மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களின் கணவர் என்றும் அவரை அலுவல் முடித்து வீட்டிற்கு அழைத்துச் செல்ல வந்திருப்பதாகவும் தான் திருப்பூர் கூட்டுறவு நகர வங்கியில் கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் தானாகவே தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க இது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்திற்கு மேற்புறத்தில் உள்ள பொறியாளர் பிரிவு அலுவலகத்திற்குள் நுழைந்த போது வடக்கு பார்த்து தனது இருக்கையில் அமர்ந்திருந்த திருமதி.M.கௌசல்யா, ஒன்றிய பணி மேற்பார்வையாளர் அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டு அவரை விசாரிக்க அவர் தான் கடந்த 2018-ம் வருடம் முதல் இவ்வலுவலகத்தில் பணியாற்றி வருவதாகவும் தனது இருக்கையின் அருகே இருந்த கைபையில் இருந்து பணம் ரு.530/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க இது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நபருக்கு எதிரே நின்றிருந்த தொரவலூர் ஊராட்சி பணி தள பொறுப்பாளரான திரு.P.சுந்தரமூர்த்தி, த/பெ.பாப்பண்ணன், கதவு எண்.1/167, தொரவலூர் மேற்குபதி (PO), குன்னத்தூர் என்பவரை விசாரிக்க அவர் தானாகவே முன் வந்து தனது வலது புற பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.16,350/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக பதிலளித்தார். மேற்படி பணம் ரூ.16,350/- கையூட்டாக அலுவலர்களுக்கு கொடுக்க வந்த பணமாக இருக்க கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி நபர் அருகே நின்றிருந்த அவரது மனைவியும் தொரவலூர் ஊராட்சியின் ஊக்குவிப்பாளருமான திருமதி.கவிதா என்பவரை விசாரிக்க அவரிடம் பணம் ஏதும் இல்லை. மேற்படி அறைக்கு வலது புறம் இருந்த கம்ப்யூட்டர் அறையில் நுழைந்த போது வடக்கு பார்த்து அமர்ந்திருந்த கணினி உதவியாளர் திரு.நவீன் சக்கரவர்த்தி என்பவரை விசாரிக்க அவர் தான் தொகுப்பூதியராக கடந்த 2009-ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருவதாகவும் மாத சம்பளமாக தனக்கு ரூ.12,000/- அரசாங்கம் தனக்கு

தருவதாகவும் பின் தானாகவே தனது வலது புற பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.2,950/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதால் மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அறைக்கு வடபுறம் உள்ள மெயின் ஹாலில் நுழைந்த போது அங்கு தெற்கு பார்த்து அமர்ந்திருந்த கம்ப்யூட்டர் ஆபரேட்டர் (NMR) ஆக பணிபுரியும் திருமதி.V.கோகிலா என்பவரை விசாரிக்க அவர் தான் கடந்த 2012-ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருவதாகவும் அரசாங்கத்தில் இருந்து மாத சம்பளமாக ரூ.12,000/- பெறுவதாகவும் கூறினார். மேற்படி நபரை விசாரிக்க அவர் தானாகவே தனது இருக்கையின் அருகே இருந்த கைப்பையில் இருந்து பணம் ரூ.2,410/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க தனது தோழியின் திருமணத்திற்காக வசூல் செய்யப்பட்ட பணம் என கூறியதால் விசாரணையின் பொருட்டு மேற்படி பணம் ரூ.2,410/- கைப்பற்றப்பட்டது. மேற்படி நபருக்கு இடது புறம் தனது இருக்கையில் அமர்ந்திருந்த டைப்பிஸ்ட் திருமதி.சபீனா என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தனது இருக்கையின் அருகே வைத்திருந்த கைப்பையினுள் இருந்த பணம் ரூ.1,460/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க இது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பிறகு போர்டிகோ வந்த போது அங்கு நின்றிருந்த தனி நபரான ஒப்பந்ததாரர் திரு.R.சிவன் வயது 48, த/பெ.ராஜன், கதவு எண்.8/3554B, அண்ணா நகர் மேற்கு, G.M.நகர், நெருப்பெரிச்சல், திருப்பூர் என்பவரை விசாரிக்க அவர் தான் பொறியாளர் பிரிவு அலுவலகத்தில் உள்ள உதவி பொறியாளர் திரு.இளங்கோ அவர்களை பார்ப்பதற்காக அவரது பிரிவுக்கு சென்று விட்டு வெளியே வந்து நின்று கொண்டிருப்பதாக கூறினார். மேற்படி நபரை விசாரிக்க அவர் தான் மேற்படி உதவி பொறியாளர் திரு.இளங்கோ அவர்கள் இவ்வலுவலகத்திலுள்ள தொட்டியை இடிக்கும் பணியை செய்யுமாறு கூறியதன் பேரில் இவ்வலுவலகத்திற்கு வந்ததாக கூறினார். அவர் தானாகவே முன் வந்து தனது சட்டையின் இடது புற பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.20/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது கணக்கில் வராத மொத்த

பணம் ரூ.21,710/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்கள் குறித்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) அவர்களிடம் விசாரிக்க அவர் தனது பராமரிப்பில் இருக்கும் வட்டார ஊராட்சி வருகைப் பதிவேடு 2020, வட்டார ஊராட்சி வருகைப் பதிவேடு நடப்பு குறிப்பு-2020, களப்பணியாளர் முகாம் பதிவேடு, வட்டார ஊராட்சி அலுவலகப் பணியாளர் முகாம் பதிவேடு-2020 வட்டார ஊராட்சி, வருகை தராதவர்கள் பதிவேடு-2020 வட்டார ஊராட்சி, மாற்றுப்பணி வருகை பதிவேடு மற்றும் LFD-I பதிவேடு ஆகியவைகளை எடுத்து ஆஜர் செய்தார். 1) மேற்படி வட்டார ஊராட்சி வருகைப் பதிவேட்டின் நவம்பர் மாதத்திற்கான பக்க எண்.41, 42, .43, 44-ன் நகல், 2) வட்டார ஊராட்சி வருகைப் பதிவேடு நடப்பு குறிப்பு 36 மற்றும் 37-ம் பக்கத்தின் நகல், 3) களப்பணியாளர் முகாம் பதிவேடு வட்டார ஊராட்சி யின் பக்க எண்.172, 173-ன் நகல் 4) அலுவலகப் பணியாளர் முகாம் பதிவேட்டின் பக்க எண்.94, 95-ன் நகல் 5) வருகை தராதவர்கள் பதிவேட்டின் பக்க எண்.64, 65 மற்றும் 66-ன் நகல் 6) மாற்றுப் பணி பதிவேட்டின் பக்க எண்.10-ன் நகல் 7) LFD-I பதிவேட்டின் பக்க எண்.64 மற்றும் 65-ன் நகல் ஆகியவற்றை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அலுவலகத்தில் பயன்படுத்தும் ஆவணங்கள் குறித்து கேட்க திருமதி.S.சாந்தி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) அவர்கள் தனது பராமரிப்பில் இருக்கும் கிராம ஊராட்சி வருகைப் பதிவேடு-2020, கிராம ஊராட்சி வருகைப் பதிவேட்டின் நடப்பு குறிப்பு-2020, கிராம ஊராட்சி களப்பணியாளர் முகாம் பதிவேடு-2020, கிராம ஊராட்சி அலுவலக பணியாளர்கள் முகாம் பதிவேடு, கிராம ஊராட்சி தாமத வருகைப் பதிவேடு-2020, கிராம ஊராட்சி comp.ope.வருகைப் பதிவேடு-2020, கணினி உதவியாளர் வருகைப் பதிவேடு-2020 கிராம ஊராட்சி ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி 1) கிராம ஊராட்சி வருகை பதிவேடு-2020-ன் நவம்பர் மாதத்திற்கான வருகைப் பதிவேட்டின் பக்க எண்.32, 33, 34 ஆகியவற்றின் நகல் 2) கிராம ஊராட்சி வருகைப் பதிவேட்டின் நடப்பு குறிப்பு-2020-ன் பக்க எண்.38-ன் நகல் 3) கிராம ஊராட்சி களப்பணியாளர் முகாம் பதிவேடு-2020ன் பக்க எண்.28, 29-ன் நகல். 4) கிராம ஊராட்சி அலுவலக பணியாளர்கள் முகாம் பதிவேடு-2020-ன் பக்க எண்.5-ன் நகல். 5) கிராம ஊராட்சி தாமத வருகைப்

பதிவேடு-2020-ன் பக்க எண்.92-ன் நகல் 6) கிராம ஊராட்சி comp.ope.வருகைப் பதிவேடு-2020-ன் பக்க எண்.11-ன் நகல்.7) கணினி உதவியாளர் வருகைப் பதிவேடு-2020 கிராம ஊராட்சியின் பக்க எண்.6-ன் நகல் ஆகியவற்றை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) திருமதி.S.சாந்தி அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணக்காக கைப்பற்றப்பட்டது. இவ் அலுவலக கொடி நாள் வசூல் குறித்து கேட்க கொடி நாள் வசூல் எதுவும் இல்லை என துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) திரு.பழனிச்சாமி அவர்கள் கூறினார். இந்த திடீர் தணிக்கையானது 19.11.2020-ம் தேதி மாலை சுமார் 19.00 மணிக்கு துவங்கி இரவு சுமார் 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் நடவடிக்கையானது மடிக்கணினியில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.C.தர்மராஜ் என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது அரசு அலுவலர்களையும், மற்ற நபர்களையும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டனர்.இவ்வலுவல பெண் அலுவலர்களை அனுப்பர்பாளையம் காவல் நிலைய முதல் நிலை பெண் காவலர் 779 திருமதி. ராதா மற்றும் முதல் நிலை காவலர் 790 திருமதி.G.கிருஷ்ணவேணி ஆகியோரால் தணிக்கை செய்யப்பட்டனர். இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை கீழ்க் கண்ட நபர்களால் கையெழுத்து செய்யப்பட்டது. ஒப்பம் xxxx S. மணிகண்டன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருப்பூர், P.சுந்தரமூர்த்தி, பணி தள பொறுப்பாளர், தொரவலூர் ஊராட்சி, திருப்பூர் மாவட்டம், திரு.நவீன்சக்கரவர்த்தி, கணினி உதவியாளர், திருப்பூர், V.கோகிலா,கணினி உதவியாளர், திருப்பூர், R.பழனிச்சாமி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது), திருப்பூர் வட்டாரம், S.சாந்தி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) திருப்பூர் வட்டாரம், P. ராதா, W-Grl 779, G.கிருஷ்ணவேணி, W-Grl 790, சிறப்பு உதவி ஆய்வாளர் C.தர்மராஜ், S ரத்தினம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர் மற்றும் R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.21,710/-ஐயும், இன்று 20.11.2020-ம் தேதி 11.00 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.8/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of Prevention of Corruption

(Amendment) Act 2018 கீழ் 11.15 மணிமுதல் 12.15 மணி வரை வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், செயல் முறை நடவடிக்கை, மற்றும் பணம் ரூ.21,710/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது."

R. Ke... 20/11/2020
Inspector of Police,
VAC, Tiruppur.